# மத்தேயு நற்செய்தி தொடர் வினாவிடைப் போட்டி
## (அதிகாரம் 11-12)

## I.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்

1. வரவிருப்பவர் நீர்தாமா? அல்லது வேறு ஒருவரை எதிர்பார்க்க வேண்டுமா? என்று கேட்டது யார்?

   1. பேதுரு
   2. திருமுழுக்கு யோவான்
   3. பரிசேயர்
   4. சீடர்களில் ஒருவர்

2. மத்தேயு எழுதிய நற்செய்தியில் 11ம் அதிகாரத்தில் இறைமகன் இயேசு என்னென்ன அற்புதங்கள் செய்தார் என்று கூறப்படுகின்றது?

   1. பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர்
   2. கால் ஊன முற்றோர் நடக்கின்றனர்
   3. தொழு நோயாளர் நலமடைகின்றனர்
   4. காது கேளாதோர் கேட்கின்றனர்
   5. இறந்தோர் உயிர் பெற்று எழுகின்றனர்
   6. ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது.

3. இதோ! நான் என் தூதனை உமக்குமுன் அனுப்புகிறேன். அவர் உமக்குமுன் எமது வழியை ஆயத்தம் செய்வார்'' என்று இறைவாக்கினர் யாரைக் குறித்து கூறுகின்றார்?

   1. இயேசு கிறிஸ்து
   2. இறைாக்கினர் எலியா
   3. திருமுழுக்கு யோவான்
   4. இறைவாக்கினர் எசாயா

4. இயேசுவின் போதனையை கேட்டும் மனம் மாற மறுத்த நகரங்கள் யாவை?

   1. கொராசின் நகர்
   2. பெத்சாய்தா நகர்
   3. கப்பர்நாகும் நகர்
   4. எகிப்து
   5. எருசலேம்

5. தந்தையே விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே ! உம்மைப் போற்றுகிறேன் என்று செபித்தது யார்?

   1. இறைமகன் இயேசு
   2. பேதுரு
   3. பரிசேயர்களில் ஒருவர்
   4. சீடர்கள்

6. ஓய்வுநாளின் போது இயேசு வயல் வழியே சென்றபோது, பசியாயிருந்ததால் கதிர்களைக் கொய்து தின்னத் தொடங்கினர் - இவர்கள் யாவர்?

   1.பரிசேயர்கள்
   2.இறைமகன் இயேசு
   3.இயேசுவின் சீடர்கள்
   4.குணம் பெற்ற மக்கள்

7. பழைய ஏற்பாட்டில் இறை இல்லத்திற்கு சென்று பசியாய் இருந்தபோது அர்ப்பண அப்பங்களை உண்டவர் யாவர்?

1. தாவீது அரசரும் அவருடன் இருந்தவர்களும்
2. இயேசுவும் அவர்களுடைய சீடர்களும்
3. பரிசேயர்களும் சதுசேயர்களும்
4. இஸ்ரயேல் மக்களும் அவர்களுடைய குழந்தைகளும்

8. பழைய ஏற்பாட்டில் அர்ப்பண அப்பங்களை யார் மட்டும் உண்ணவேண்டும் என்று கூறப்படுகின்றது?

1. பரிசேயர்கள் மட்டும்
2. குருக்கள் மட்டும்
3. இஸ்ரயேல் மக்கள் எல்லாரும்
4. இயேசுவின் சீடர்கள் மட்டும்

9. “ பலியை அல்ல இரக்கத்தையே” என்று சொல்லியவர் யார்?

1. இறைமகன் இயேசு
2. இறைவனின் தாய் மரியாள்
3. இயேசுவின் சீடர்களில் ஒருவர்
4. சதுசேயர்களில் ஒருவர்

10. “ இவர் சண்டை சச்சரவு செய்ய மாட்டார், கூக்குரலிடமாட்டார். தம் குரலைத் தெருவில் எழுப்பவுமாட்டார்.” இவர்யார்?

1.இறைவாக்கினர் எசாயா
2.இறைமகன் இயேசு கிறிஸ்து
3.செபதேயுவின் மகன்
4.இயேசுவிடம் குணம் பெற்ற ஒருவர்

## II. கோடிட்ட இடங்களை நிரப்பவும்

11. மத்தேயு நற்செய்தி 11ம் அதிகாரத்தில் இயேசு இத்தலைமுறையினரை யாருக்கு ஒப்பிடுகின்றார்?

12. ____________________ இவற்றை மறைத்து ________________________ வெளிப்படுத்தினீர்.

13. பெருஞ்சுமை சுமந்து ________________________, எல்லோரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு ______________________ தருவேன்.

14. இறைமகன் இயேசு ____________________________________ உடையவர்.

15. இயேசுவின் __________ உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடம் __________________, அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு _________________ கிடைக்கும்.

16. இதோ என் __________. இவர் நான் ___________கொண்டவர். இவரே என் அன்பர். இவரால் என் ________________ பூரிப்படைகின்றது.

## III. சரி அல்லது தவறு

17. “யோவான் வந்தபோது அவர் உண்ணவுமில்லை, குடிக்கவுமில்லை இவர்களோ “அவன் பேய்பிடித்தவன் என்றார்கள்” (சரி அல்லது தவறு)

18. “மானிடமகன் வந்துள்ளார், அவர் உண்கிறார், குடிக்கிறார். இவர்களோ, இம்மனிதன் பெருந்தீனிக் காரன், குடிகாரன், வரிதண்டுபவர்களுக்கும், பாவிகளுக்கும் நண்பன்”என்கிறார்கள்.”
(சரி அல்லது தவறு)

19. “தூய ஆவிக்கு எதிரான பழிப்புரை மன்னிக்கப்படாது” (சரி அல்லது தவறு)

20. “தூய ஆவிக்கு எதிராகப் பேசுவோர் இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்புப் பெற மாட்டார்” (சரி அல்லது தவறு)

## IV. சரியான விடை எழுதவும்

21 ஓய்வு நாளில் இயேசு யாரைக் குணமாக்கினார்.?

22 ஓய்வு நாளில் மனிதருக்கு நன்மை செய்வதே முறை என்று யார் சொன்னது.?

22. மத்தேயு பன்னிரண்டாம் அதிகாரத்தில் பேய் பிடித்த ஒருவரைக் கொண்டு வந்தார்கள். அவர்களிடம் இருகுறைகள் காணப்பட்டன. அவை யாது?

24 பேய்பிடித்த ஒருவரை இயேசு குணமாக்கிய போது, திரண்டிருந்த மக்கள் யாவரும் மலைத்துப்போய் தாவிதின் மகன் இவரோ என்று பேசிக் கொண்டனர். ஆனால் பரிசேயர்கள் என்னக் கூறினார்கள்?

25. நான் கடவுளின் ஆவியைக் கொண்டே பேய்களை ஓட்டுகிறேன் என்று கூறியவர் யார்?

## V. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | மரம் நல்லது என்றால் | ~ | தீர்ப்பு நாளில் கணக்கு கொடுக்க வேண்டும் |
| 2. | மரம் கெட்டது என்றால் | ~ | நல்லவற்றை வெளிக்கொணர்வர் |
| 3. | மரத்தை அதன் | ~ | தீயவற்றை வெளிக்கொணர்வர் |
| 4. | உள்ளத்தின் நிறைவையே | ~ | குற்றமற்றவர்களாகவும் கருதப்படுவீர்கள் |
| 5. | நல்லவர் நல்ல கருவூலத்திலிருந்து | ~ | குற்றவாளிகளாகவும் கருதப்படுவீர்கள் |
| 6. | தீயவரோ தீய கருவூலத்திலிருந்து | ~ | வாய் பேசும் |
| 7. | மனிதர் பேசும் ஒவ்வொரு வீண் வார்த்தைக்கும் | ~ | கனியால் அறியலாம் |
| 8. | உங்கள் வார்த்தைகளைக் கொண்டே | ~ | அதன் கனியும் கெட்டதாக இருக்கும் |
| 9. | உங்கள் வார்த்தைகளைக் கொண்டே | ~ | அதன் கனியும் நல்லதாக இருக்கும் |